**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருவண்ணாமலை**

**முன்னிலை திரு. கே. சக்திவேல், பி.காம்., பி.எல்.,**

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி, திருவண்ணாமலை**

**2024-ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 13-ஆம் நாள் செவ்வாய்கிழமை**

**இ.ம.எண்.03/2024 இன் அசல் வழக்கு எண்.139/2020**

1. பத்மா
2. ஜெயபாலாஜி ......மனுதாரர்கள்/வாதிகள்

/எதிர்/

1. மல்லிகா
2. செல்வம்மாள்
3. உயர்திரு. பொது மேலாளர் அவர்கள்,
   தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம்,
   TNSTC, வேலூர் மாவட்டம்.
4. உயர்திரு. மேலான் இயக்குநர் அவர்கள்,
   தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம், விழுப்புரம் லிட்,
   தலைமையகம் விழுப்புரம்,
   நெ.3/137, சாலமேடு வழுதரெட்டி,
   விழுப்புரம் - 605 602.
5. உயர்திரு. பொது மேலாளர் அவர்கள்,
   தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம்,
   தலைமையகம் திருவண்ணாமலை மண்டலம்,
   புறவழிச்சாலை, மாவட்ட ஆட்சியர் பெருந்திடல் வளாகம்,
   வேங்கிக்கால் புதுார் (கி) அருகில்,
   திருவண்ணாமலை வட்டம், தமிழ்நாடு - 606 604.

.........எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இந்த மனுவானது இந்நீதிமன்றத்தின் முன்பாக விசாரணைக்காக இறுதியாக 08.08.2024 அன்று வந்தபோது, மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு. எஸ். அபிராமன் அவர்கள் ஆஜராகியும், 3 முதல் 5 வரையிலான எதிர்மனுதாரர்கள் தரப்பில் திரு. ஆர். மனோகரன் அவர்கள் ஆஜராகியும், 1 மற்றும் ம் எதிர்மனுதாரர்கள் அசல் வழக்கிலேயே தோன்றாதரப்பினர்களாக கருதப்பட்டுள்ளனர். இருதரப்பிலும் வாதுரைகள் கேட்கப்பட்டும், மனு உரை, எதிர் உரை மற்றும் மனுதாரர் தரப்பு ஆவணங்களை பரிசீலனை செய்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.

## <u>உத்தரவு</u>

மனுவுடன் இணைக்கப்பட்டுள்ள பிரமாண பத்திரிகையில் குறிப்பிட்டுள்ள காரணங்களை அனுசரித்து, மனுதாரர்கள்/வாதிகள் தரப்பு Pw1 சாட்சியத்தை Recall செய்து வழக்கை தொடர்ந்து நடத்த ஏதுவாக தகுந்த உத்திரவு செய்ய வேண்டி, உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 18 விதி 17ன் கீழ் இம்மனுவினை மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

### <u>2.மனுவின் சுருக்கம்-</u>

மனுதாரர்கள் அசல் வழக்கில் வாதிகள் ஆவார்கள். 1 முதல் 5 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் மீது இறந்த முத்துக்குமார் என்பவரின் பணிப்பதிவேட்டில் சர்வீஸ் ரிஜிஸ்டரில் 1ஆம் பிரதிவாதி பெயரை நீக்கம் செய்து, 1ஆம் வாதி பத்மா பெயரைச் சேர்த்து 3, 4, 5 பிரதிவாதிகளுக்கு ஒரு செயலுறுத்துக்கட்டளை பிறப்பிக்குமாறும் மற்றும் இதர பரிகாரங்களை கோரி வழக்கு தாக்கல் செய்திருந்த நிலையில் 3, 4, 5 பிரதிவாதிகள் தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்து எதிர்வியாஜ்ஜியம் செய்து வருகிறார்கள். 1ம் மனுதாரர் தரப்பில் ஜெயிக்கக்கூடிய அம்சம் நிறைய முக்கியமான கூடுதல் ஆவணங்கள் தாக்கல் செய்ய உள்ளதாலும், வழக்கை நிரூபணம் செய்யக்கூடிய ஆவணங்கள் மற்றும் சாட்சியங்கள் உள்ளன என்றும், 1ம் மனுதாரர் தரப்பு முதன்மை சாட்சிய வாக்குமூலம் Recall செய்ய வேண்டியது அவசியமானது. அவ்வாவணங்களை தாக்கல் செய்ய மனுதாரரை கொண்டு தாக்கல் செய்ய Pw1 ஆன மனுதாரரை Recall செய்ய வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>3. 5ம் எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டு 3, 4ம் எதிர்மனுதாரரால் ஏற்றுக்கொள்ளப்பட்ட எதிருரையில் சுருக்கம்-</u>**

மனுதாரர்கள் கூறியுள்ள சங்கதிகள் சிலவற்றை தவிர மற்ற சங்கதிகளை இந்த எதிர்மனுதாரர்கள் முற்றிலும் வன்மையாக மறுக்கப்படும் சாட்டுரைகளை மனுதாரர்களே மெய்பிக்கவேண்டும். வழக்கை மனுதாரர்கள்/வாதிகள் சுமார் 2 1/2 வருடத்திற்கு மேலாக வாதி தரப்பு சாட்சிகளையே விசாரணை செய்யாமல் வேண்டுமென்றே காலதாமதம் செய்து வருகிறார்கள். மேலும், மேற்படி வழக்கில் வாதியை Pw1-ஐ சுமார் 2 1/2 வருடத்திற்கு முன்பு விசாரிக்கப்பட்டு முடிக்கப்பட்ட நிலையில் மேற்படி வழக்கை காலதாமதம் செய்ய வேண்டும் என்ற கெட்ட நோக்கத்தோடு மேற்படி மனுவை மனுதாரர்கள்/வாதிகள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார்கள். மேற்படி மனுவில் வாதி தரப்பு எந்த சாட்சியை மீண்டும் விசாரிக்க வேண்டும் என குறிப்பிடாமல் மேற்படி Re- Call மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி மனு கோப்பிற்கு எடுக்கப்பட்டதே தவறானதாகும். மேற்படி வழக்கில் வாதி தரப்பில் மூன்றுக்கு மேற்பட்ட சாட்சிகள் விசாரிக்கப்பட்ட நிலையில் எந்த சாட்சியை மீண்டும் விசாரிக்க மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பதை மனுதாரர்கள்/வாதிகள் சொல்லப்படாமல் மேற்படி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி மனு சட்டப்படி தள்ளுபடி செய்ய வேண்டிய ஒன்றாகும்.

4. மேற்படி வழக்கில் மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் சில ஆவணங்கள் காலதாமதமாக கிடைக்கப்பட்டதாகவும் அதனை தற்போது மேற்படி வழக்கில் வாதிகள் தரப்பு சான்றாவணமாக குறியீடு செய்ய வேண்டும் என்று கூறுவது பொய்யான, தவறான சங்கதிகள் ஆகும். மேற்படி பிரமாண வாக்குமூலத்தில் எந்த முக்கியமாக ஆவணங்கள் தாக்கல் செய்ய வேண்டுமென்று குறிப்பிட்டு கூறாத நிலையில், Pw1 ஆன மனுதாரரை Recall செய்ய மனுவை தாக்கல் செய்துள்ளது சட்டம் முகாந்திரமற்றது. இந்த மனுதாரர் நோக்கம் என்னவென்றால் எதிர்மனுதாரரை அலகழிக்க வேண்டுமென்ற எண்ணத்திலும், வழக்கை காலம் கடத்த வேண்டுமென்று இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்.

5. இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டன. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன. இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில், மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள, இம்மனு அனுமதிக்கக்கூடியதா? என்பதை பரிசீலனை செய்ய வேண்டியுள்ளது.

**<u>தீர்வு</u>**

6. அசல் வழக்கானது, மனுதாரர்கள் தரப்பு விசாரணை முடிக்கப்பட்ட நிலையில், மனுதாரர்கள் தரப்பில் சில ஆவணங்கள் குறியீடு செய்ய வேண்டியுள்ளதால் 1ம் மனுதாரரை Recall செய்ய வேண்டி, இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர்கள் தரப்பில் மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் சட்டப்படி ஏற்கக்கூடியது அல்ல என்று தெரிவித்து இம்மனுவினை அனுமபிப்தற்கு கடுமையான ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டது.

7. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன. மனுதாரர்கள், எதிர்மனுதாரர்கள் மீது செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளனர். இவ்வழக்கில் மனுதாரர்கள் தரப்பில் சாட்சியம் முடிக்கப்பட்டும், மேற்படி தாவாவில் மிக முக்கியமான ஆவணங்கள் தாக்கல் செய்யவேண்டியுள்ளதால் 1ம் மனுதாரரை Recall செய்ய வேண்டி, இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர்கள் தரப்பில் இம்மனுவினை அனுமதிப்பதற்கு கடுமையாக ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டது. மனுதாரர்கள் அவர்களுடைய வழக்கினை நிரூபணம் செய்வதற்காக ஒரு வாய்ப்பு கொடுப்பதுதான் நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்குமென்று இந்நீதிமன்றம் கருதுகிறது. எதிர்மனுதாரர்களுக்கு ஏற்பட்ட காலதாமதம் மற்றும் கால இழப்பு மற்றும் அலைச்சல் ஆகியவற்றை ஈடு செய்யும் விதத்தில் இம்மனுவை மனுதாரர்கள் செலவு தொகையுடன் அனுமதிக்க கூடியது என்று இம்மனுவின் பிரச்சனைக்கு தீர்வு காணப்படுகிறது.

**இறுதியாக, மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள இம்மனுவானது, மனுதாரர்கள், 5ம் எதிர்மனுதாரரின் செலவுத்தொகையாக ரூ.500/-யை எதிர்வரும் 20.08.2024-க்குள் செலுத்தும்பட்சத்தில் இம்மனுவானது அனுமதிக்கப்படுகிறது என்றும், தவறும் பட்சத்தில் தள்ளுபடிக்கு உரியது என்று உத்தரவிடப்படுகிறது. அழைக்க 20.08.2024, அன்றைய தேதியிலேயே மனுதாரர்கள்/வாதிகள் நீதிமன்றத்தில் ஆஜராகி கூடுதல் முதல் விசாரணை வாக்குமூலம் மற்றும் ஆவணங்களை தாக்கல் செய்ய உத்தரவிடப்படுகிறது.**

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்குச் சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு 2024 ஆகஸ்டு திங்கள் 13-ஆம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

ஒம்/- K. சக்திவேல்
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருவண்ணாமலை

இருதரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் - இல்லை

ஒம்/- K. சக்திவேல்
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருவண்ணாமலை